**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Socio-Life Challenges of Fishermen

**DR. T. RADHIKA LAKSHMI*,**

Associate Professor, Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Tamil Nadu, India.
*Correspondence: ngm@ngmc.org,

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Human life is determined by social conditions. The character of man on society, and the character of society on the individual, are intertwined and change each other. Man needs society to maintain himself and to maintain himself without being destroyed. Thus, the bond between literature and society is stressed when the creator tries to realistically portray the social thoughts surrounding him in his works. Furthermore, it is the duty of a writer to try to solve the social problems faced by humans by revealing the true knowledge about the events taking place in society. This article examines the life problems of fishermen, their knowledge of the sea, the way they are worshipped as a sea god, and the unity of fishermen, etc., as featured in the novels of the writer Su. Tamilchelvi, who has done such a duty well.

**Keywords:** Novel, Technology, Sea Breeze, Society, boat

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# மீனவர்களின் வாழ்வியல் சிக்கல்கள்

***முனைவர் த. ராதிகா லட்சுமி,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் வாழ்வு சமுதாயச்சூழல்களாலே நிர்ணயிக்கப்படுகின்றன.மனிதனின் பண்பு சமுதாயத்தின் மீதும், சமுதாயத்தின் பண்பு தனிமனிதனின் மீதும் பின்னிப்பிணைந்து ஒன்றையொன்று மாற்றிக்கொண்டே இருக்கின்றன. மனிதன் தன்னைப் பேணிக்காத்து கொள்ளவும், அழிவுக்கு ஆட்படாமல் நிலைநிறுத்திக் கொள்ளவும் சமூகம் தேவைப்படுகிறது. இதனால் படைப்பாளர் தன்னைச் சூழ்ந்துள்ள சமுதாயச் சிந்தனைகளைத் தம் படைப்புகளில் எதார்த்தத்துடன் படைத்துக்காட்ட முற்படும்போது இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையிலான பிணைப்பு அழுத்தம் பெறுகின்றது. மேலும் சமுதாயத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளைப் பற்றிய உண்மையறிவைப் புகட்டி மனிதனின் வாழ்க்கையில் எதிர்ப்படும் சமூகச்சிக்கல்களைத் தீர்க்க முயல்வது ஒரு படைப்பாளரின் கடமை எனலாம். அத்தகைய கடமையைச் செவ்வனே செய்துள்ள படைப்பாளர் சு.தமிழ்ச்செல்வியின் நாவல்களான மாணிக்கம், ஆறுகாட்டுத்துறை நாவல்களில் இடம்பெறும் மீனவர்களின் வாழ்க்கைச் சிக்கல்கள், கடல் குறித்த அறிவுத்திறன், கடலைத் தெய்வமாக வணங்கும் முறை, மீனவர்களின் ஒற்றுமை போன்றவை குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:**

நாவல், தொழில்நுட்பத்திறன், கடல்காற்று, சமுதாயம், படகு

**முன்னுரை**

சமுதாயத்தின் விளைபொருளே இலக்கியமாகும். இலக்கியம் சமுதாயத்தையும் சமுதாயம் இலக்கியத்தையும் ஒன்றையொன்று சார்ந்தே வளர்ந்து வந்துள்ளன. சமுதாயம் இன்றி இலக்கியம் இல்லை எனில் அது மிகையாகாது. இலக்கியவாதி என்பவர் சமுதாயத்தின் ஒரு உறுப்பினராவார். இலக்கியம் சமுதாயத்தை அதன் சிக்கல்களைச் சமுதாயத்திற்கே உணர்த்தும் ஒரு கருவியாக அமைகிறது. அவ்வகையில் படைப்பாளர் சு.தமிழ்ச்செல்வியின் மாணிக்கம், ஆறுகாட்டுத்துறை போன்ற நாவல்கள் மீனவர்களின் வாழ்க்கைமுறையை எடுத்துரைக்கின்றன. சமுதாயத்தின் ஒரு அங்கத்தினரான மீனவர்களின்

பணிகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைப் போராட்டம், எதிர்கொள்ளும் சிக்கல்கள், நிலையில்லா நாடோடி வாழ்க்கை போன்றவற்றைக் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கடல் குறித்த அறிவுத்திறன்**

அன்பின் ஐந்திணை எனும் சிறுநிலக் கூறுகளுள் ஒன்றான நெய்தல்புல மீனவமக்களின் வாழ்க்கைச் சித்திரம் கண்கவரும் விதத்தில் அழகாக 'ஆறுகாட்டுத்துறை' நாவலாகப் படைக்கப்பட்டுள்ளது. படைப்பாளரின் மற்றொரு நாவலான 'மாணிக்கத்திலும்' மீனவர்களின் வாழ்க்கை, தொழில்நுட்பங்கள் குறித்த செய்திகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

"பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்குபிணி நோன்கயிறு அரீஇதை புடையூக்
கூம்பு முதல் முருங்க எற்றிக் காய்ந்துடன்
கடுங்காற்று எடுப்பக் கல்பொருது உரைஇ
நெடுஞ்சுழிப்பட்ட நாவாய் போல"

(பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ), மதுரைக்காஞ்சி, பா.அ.375-379)

துறைமுகத்தின் அமைதிக்கொலுவில் நின்ற கப்பல் நங்கூரம் பாய்ச்சிய கயிறுஇற்றுப் போகவும், துறைவிடுத்து அலைச்சூழலில் சிக்கவும், பாய்மரம் முறியவும், கடும்புயலுடன் பேரலைகள் எழுகின்றன. இவ்வலைகளின் சூழலில் சிக்கி கப்பல் போலக் கட்டுத்தறியை முறித்துத் தானும் கலங்கிப் பிறரையும் கலங்கச்செய்தது. களிறு எனும் மதுரைக்காஞ்சியின் அடிகளை ஒத்தே ஆறுகாட்டுத்துறையில் சித்திரைக்குழப்பம் ஏற்படுகிறது.

மீனவர்களின் வாழ்வில் அடிநாதமாக விளங்கும் கப்பல் துறைமுகத்தில் இருப்பினும் புயற்காற்றினால் அழிவதுண்டு. ஆண்டுதோறும் சித்திரைக்குழப்பம் ஆறுகாட்டுத்துறை மக்களின் வாழ்க்கையை வறண்டு போகச் செய்கிறது. இக்காலத்தில் மக்கள் மரக்கணங்களையோ, கட்டுமரங்களையோ கடலில் நிறுத்தி வைக்கமாட்டார். சித்திரை இருபத்தொன்றாம்தேதி குழப்பம் ஆரம்பித்து விட்டால் அதுமுடியும் வரை மரங்களைக் கரையில் ஏற்றி வைத்துவிடுவர்.

"ஆறுகாட்டுத்துறையின் கடற்கரை முகம்போல முன்குவிந்து இருப்பதால் கடல்காற்று தடாலடியாய் புகுந்து மரக்கணங்களையும் மரங்களையும் ஒன்றோடொன்று மோதவைத்து உடைத்து சுக்குநூறாக்கி கடலில் ஒதுக்கிவிட்டுப் போய்விடும்"

(சு. தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, ப. 88)

என்பதால் 'வருமுன்காப்போம்' என்பதற்கிணங்க மக்கள் முன்னேற்பாடாக தமது பொருட்களைப் பாதுகாத்துக் கொள்வர். சித்திரைக்குழப்பக் காலத்தில் மீனவர்கள் கடலில் இறங்கமாட்டார்கள். இறங்கி வலைபோட்டாலும் எதுவும் கிடைக்காது. துன்பமே ஏற்படும்.

கடலைத் தெய்வமாக வணங்கும் மீனவர்கள் கடலின் போக்குக் குறித்துத் தெளிவான அறிவைப் பெற்றிருப்பின் மட்டுமே உயிருடன் வாழஇயலும் என்பதைப் படைப்பாளர் பதிவுசெய்துள்ளார். நங்கூரத்தைப் பாகம் அறிந்து பாய்ச்சுதல், திசை அறியும் முறை, காற்றின் போக்கறிந்து கப்பலைச் செலுத்துதல் போன்ற தொழில்நுட்பங்களை அறிந்த மீனவரே இத்தொழிலைச் செய்யவியலும். தொழிலுக்குக் கடலில் இறங்குபவர்கள் மீண்டும் உயிருடன் கரையை வந்தடைவர் என்ற உறுதியில்லாத, பாதுகாப்பில்லாத வாழ்க்கையே மீனவர்களுடையது. திசை அறியாமலோ, சுழற்காற்றில் சிக்கியோ, விலங்குகளிடத்தில் அகப்பட்டோ, வேடரிடத்தில் பிடிபட்டோ உயிர்விடுபவர்கள் ஏராளம்.

**மீனவர்களின் பண்புகள்**

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கடலோர கிராமமான ஆறுகாட்டுத்துறையில் மக்களிடையே மதிப்பும், மரியாதையும் கொண்டவர் சிங்காரவேலு நாட்டார். ஊரின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருப்பவர். நாட்டாரின் முயற்சியால் ஆறுவிசைப்படகுகள் துறையில் நிற்பதைக் கண்டு ஊரே மகிழ்ச்சியடைய படகில் செல்வது யார்?என்ற வினா எழும்பியது.

"தாயே சமுத்திராதேவி. என்னை நம்பும் இந்த சனங்களுக்கு எந்நாளும் என்னைஅறியாமலும் கூட நான் யாதொரு தீங்கும் செய்துவிடக் கூடாது. இவர்களுக்குள்போட்டி, பொறாமை, பகையுணர்வு ஏற்பட்டுவிடும் விதமாக நான் எதுவும் செய்துவிடக்கூடாது. எல்லோருடைய மனதும் ஒப்பும் வழியை யாரையும் கலங்கவைக்காத ஒருவழியை காட்டுவதற்கான நல்ல வார்த்தைகளை நான் பேசவேண்டும் ... எங்களுக்குள் எந்த நாளும் யாதொரு பிரிவினையும் ஏற்பட்டுவிடக்கூடாது. நல்வழி காட்டம்மா"

(சு. தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, ப. 54)

என்ற வேண்டுதல் கடலையே தெய்வமாக வணங்கும் நாட்டாரின் உள்ளத்தைப் படம்பிடித்துக்காட்டுகிறது. ஒவ்வொரு படகிலும் அனுபவமிக்க ஒருவர், துடிப்புமிக்க இளைஞர் மூவரென அந்தந்த படகின் சொந்தக்காரரே தன்னுடன் வருபவரைத் தெரிவுச் செய்து கொள்ளலாம். ஒரு நாளைக்கு கடலுக்குச் செல்ல கூலியாக நூறுரூபாய் அளிக்க வேண்டும். இலாபம் பொறுத்து பங்கு தரவேண்டும் என்ற நாட்டாரின் முடிவில் மாற்றுக்கருத்தில்லை. நாட்டார் தனக்குப் பதிலாக சாமுவேலைப் படகில் அனுப்பி தான் மரக்கணத்தில் செல்வதாகக் கூறுகிறார். மக்கள் பணவசதியின்மையால் விசைப்படகு

வாங்கவோ, கடலுக்குள் செல்லவோ இயலவில்லை என்று வருந்தக் கூடாது எனக் கருதினார். ஆயிரக்கணக்கான மக்களில் இருபத்துநான்கு நபர் மட்டும் படகில் செல்ல, மற்றவர்களில் ஒருவராகவே நாட்டார் இருக்க வேண்டுமென விரும்புவதில் மீனவமக்களின் ஒற்றுமைக்காக அவர் செயல்படுவது புலப்படுகிறது.

நாட்டார் மகளுக்காக பதவியை விட்டு விலக முடிவெடுத்தவுடன்மகன், அபராதம்செலுத்தி பதவியைத் தொடரலாம் என்றான். அதற்கு

"அபராதம் கட்டிட்டு அப்பறம் என்ன நாட்டாரு? …

கடல நம்பி வாழுற ஊரு நம்ம ஊரு. நாட்டாருஞாயமாவும் மனசு சுத்தமாவும் நடந்துக்கிட்டாத்தான் ஊரு தப்பும்"

(சு. தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, ப. 100)

என்ற நாட்டார் சொற்களின் வாயிலாக குடும்ப முடிவுகளிலும் கடலுக்கே முதன்மையான இடம் வழங்கப்பட்டது புலனாகின்றது. மேலும் நாட்டார் பதவியில் இருப்பவர் ஊருக்கு மட்டும் உபதேசம் என்றில்லாமல் கொள்கையை முதலில் தான் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விதிமுறையைக் கொண்டிருந்தது தெளிவாகிறது.

நாட்டார் மகளின் உடன்போக்குச் செயல் உயர் அங்கநிலைக்கு ஏற்பட்ட களங்கம் எனக் கருதி தாழ்வுணர்ச்சியில் சிக்கி, பதவியை மகனுக்கு அளித்து விலகுகிறார்.எனினும் ஊருக்குப் பொதுப்பிரச்சினை ஏற்பட்டால் முன்நின்று தீர்த்து வைப்பதில் ஆளுமைத் திறன் வெளிப்படுகிறது. நாட்டார் பதவிக்குக் களங்கத்தை ஏற்படுத்திவிட்டோம் என்ற எண்ணத்திலும், மகளைப் பிரிந்த துக்கத்திலும் சிக்கியவர் பேத்தி பிறந்த நிலையில் சமூகப் பொதுமதிப்பிற்காக பார்க்கச் செல்லாமல் கலங்கி நின்றார். நாட்டாரிடத்தில் உண்மையான அன்பும், மதிப்பும் கொண்ட மக்கள் சமுத்திரவல்லியை மனமுவந்து ஏற்றுக்கொண்டதால் நாட்டாரின் தாழ்வுணர்ச்சி நீங்கியது.மக்களின் மீது உண்மையான அன்பும்அக்கறையும் கொண்ட தலைவரை ஊர்க்கட்டுப்பாட்டை ஒதுக்கி விட்டு மீனவ மக்கள்முழுமையாக ஏற்றுக்கொள்வதில் மீனவமக்களின் நற்பண்பு வெளிப்படுகிறது.

**கடவுளான கடல்**

"இயற்கையிடமும், மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம்"

(தி.கு. இரவிச்சந்திரன், ஒரு ஃப்ராய்டியன் பார்வையில் தமிழ் நாட்டுப்புற வழக்காறுகள், ப. 243)

என்று சிக்மண்ட் பிராய்டு குறிப்பிடுகிறார். இயற்கைச்சீற்றத்திற்கு உட்பட்டால் தன்னால் வாழவியலாது என்று எண்ணியதன் விளைவாக மனிதன் இயற்கையை வழிபட்டு,

விழாவெடுத்து நன்றி செலுத்தலானான். சிலம்பில் மங்கலவாழ்த்துக்காதையில் ஞாயிறு, திங்கள், மாமழை என இயற்கையைப்போற்றிய வழிபாட்டினைக் காணலாம். இயற்கை மாற்றங்களால் அச்சம், வியப்புக்குள்ளாகிய மனிதன் வழிபாட்டை மேற்கொள்ளத் தொடங்கினான்.

'ஆறுகாட்டுத்துறை' புதினத்தில் மக்கள் தங்கள் வாழ்வாதாரமான கடலைத் தாயாகக் கருதி வழிபடுகின்றனர். நாட்டாருக்கு ஒற்றை வாரிசு தான் என நிமித்திகன் கூற வருத்தமுற்ற நாட்டார் கடலுக்குப்பூ, பழம், வெற்றிலை, பாக்கு,தேங்காய், பச்சரிசி, வெல்லம் போன்ற பொருட்களைப் படையலிட்டு மனமுருகி வேண்டி குழந்தை வரம் பெற்றார். நிறைமாதக் கர்ப்பிணியான பூங்காவனத்திற்குப் பிரசவத்தில் பிரச்சினை ஏற்பட்டதும் நாட்டார் அவளைக் கடற்கரையில் கிடத்தி, கடலிடம் முறையிட அழகிய பெண்குழந்தை பிறந்தது. சமுத்திராதேவியின் அருளால் கரு உருவாகி பிரசவித்ததால் அக்குழந்தைக்குச் சமுத்திரவல்லி எனப்பெயரிட்டு, ஊர்மக்கள் கடல்தாயின் மகளாகவே கருதி அன்பு செலுத்துகின்றனர். நாட்டாரின் தனிப்பட்ட வாழ்க்கை மட்டுமின்றி, ஊர்மக்கள் இணைந்து வாங்கிய கப்பல்கள் தொழிலின் ஆதாரம் என்பதால் கடலுக்குப் படையலிடுதல், எண்ணெய் வங்கி ஏற்படுத்தும் முயற்சியில் பிரச்சினை தோன்ற கடலிடம் முறையிடுதல் என வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இயற்கை வழிபாடு முன்னிறுத்தப்பட்டுள்ளது.

சமுத்திரவல்லியின் பிறப்பு, காதல், திருமணம்,கணவனின் மனமாற்றம், பிரிவு, மறுமணம் என அனைத்து நிகழ்வுகளும் கடல் சாட்சியாகவே நடந்துள்ளது. மனைவியின் மறுமணம் அறிந்த சாமுவேல் தன் உரிமையை நிலைநாட்டுவதாக எண்ணி அருள்தாசை அடித்து விரட்ட அவனும், மகனும் வேறு ஊரில் தங்குகின்றனர். வஞ்சம் தீர்க்கும் எண்ணமுடைய சாமுவேல் நள்ளிரவில் சமுத்திரவல்லியிடம் அன்புமொழிகள் உரைத்து, கடலுக்குள் அழைத்துச் சென்று, கடலில் தள்ளி கொல்லப் போவதாக உரைக்கிறான்.

"நான் ரெண்டு பேருக்கு முந்தானை விரிச்சவ தான்.ரெண்டு பேருக்கும் புள்ளப்பெத்துக் குடுத்தவ தான். இல்லங்கல ஆனா நீ சொல்லுறமேரி நான் தேவடியா இல்ல. நான் உத்தமிதாங்கிறது உண்மன்னா நான் கரயேறுவன். இந்த கடல்தாயிஎன்ன கரகொண்ட சேப்பா"

(சு. தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, ப. 275)

என்ற சமுத்திரவல்லியின் சொற்களில் சமுத்திராதேவியின் மீது கொண்ட நம்பிக்கை புலனாகிறது. சமுத்திரவல்லி ஒருமுறை குழந்தைகளைக் கண்டுவிட்டு உயிர்துறப்பதாக கெஞ்ச அவன் மனமிரங்கவில்லை. திடீரென சாமுவேல் கடலில்விழ, சமுத்திரவல்லி

சிலநிமிட மனப்போராட்டத்திற்குப் பின் அவனை விடுத்து, கரையை நோக்கி கட்டுமரத்தைத் திருப்புகிறாள். உயிருக்குயிராய் காதலித்து கைப்பிடித்த கணவனின் சுயஉருவம் அறிந்தும், அனாதையாக தவித்தும், மறுமணத்திற்கு பின்பும் சாமுவேலின் மீதிருந்த அன்புகுறையாத சமுத்திரவல்லியின் இம்முடிவிற்கு பல நாட்களாக அனுபவித்த மனப்போராட்டமும், நம்பவைத்து ஏமாற்றிய நயவஞ்சகமுமே காரணமாக இருக்கிறது. 'தற்கொல்லியை முற்கொல்லல்' என்பதற்கிணங்க கணவனைக் காப்பாற்றினால் மீண்டும் தன்னைக் கொல்ல முயற்சிப்பானோ? என்ற பயத்தினாலும் சமுத்திரவல்லி இத்தீர்மானத்தை மேற்கொண்டதாகத் தோன்றுகிறது. புதினக்கதையோட்டத்தில் சமுத்திராதேவியின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளதில் மீனவமக்கள் இயற்கையான கடலை வணங்கும்விதம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

'மாணிக்கம்' புதினத்தில் கடலை விரும்பி வணங்கும் கதாப்பாத்திரமாக மாணிக்கம் படைக்கப்பட்டிருக்கிறான்.

"கடல் ஒரு தெய்வப் பெண். ரொம்பவும் சுத்தமானவள். தன்னை விரும்பி வருபவர்களுக்கு செல்வத்தையும், மகிழ்ச்சியையும் அள்ளிக்கொடுப்பவள்"

(சு. தமிழ்ச்செல்வி, மாணிக்கம், ப. 293)

என்று கருதும் மாணிக்கத்தின் வாயிலாக மீனவமக்களின் மனதை மற்றும் இயற்கையை வணங்கும் செயலை அறிய முடிகிறது.

**தொழில்நுட்பத்திறன்**

'மாணிக்கம்' நாவலில் மாணிக்கம் விவசாயம் செய்ய வயலும் இல்லாமல் மழையில்லாததால் கூலி வேலைக்கும் செல்ல இயலாமல் மீன்பிடிக்க முற்பட்டான். வலையைக் கடனாகப் பெற்று கடலுக்குச் செல்ல ஆரம்பித்த மாணிக்கம் ஒரே மாதத்தில் கடலின் நெளிவு, சுளிவுகளை அறிந்து கொள்ள மகன் நாஞ்சியும் இணைந்தான். மழைக்காலமான புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகையில் வெள்ளை இறால்பாடு நன்றாக இருக்கும். மார்கழியில் துவங்கும் கருப்பு இறால்பாடு பங்குனி வரை சிறப்பாக இருக்கும். சித்திரை, வைகாசியில் நாள் முழுவதும் அலைந்து திரிந்தாலும் ஒன்றும் கிடைக்காது. முதல் மாதங்களில் சம்பாதித்த பணத்தைக் கொண்டு இக்காலத்தை நகர்த்துவர் என ஆண்டு முழுவதும் மீனவரின் தொழில்பாட்டினைப் படைப்பாளர் குறிப்பிடுகிறார். சித்திரையில் வீட்டிலிருக்கப் பிடிக்காத மாணிக்கம் தொழிலுக்குச் செல்ல வலையில் மாட்டிய பெரியஇறாலை எடுக்க முற்படும்போது அது நழுவியது. இதனால் மாணிக்கத்தின் மனம் இறால் பிடிப்பதற்கானப் புதியவலைத் தயாரிப்பு குறித்து சிந்தித்தது.

“இரண்டாம் நம்பர் நூலை வாங்கி வந்தான். ஒரு சாண் அளவில் கண்ணுள்ள போத்துமால் கட்டினான். அந்த போத்துமாலை அரைநம்பர் வலையின் இரண்டு பக்கமும் வைத்து. . . போத்துமாலின் ஒருகண்ணுக்கு பத்து அரைநம்பர் வலைக்கண்களை எண்ணிவிட்டு இரண்டு பக்கத்து மால்களையும் சந்தித்தான். மேலே சந்தித்தது போலவே காவலையிலும் சந்தித்தான்”

(சு. தமிழ்ச்செல்வி, மாணிக்கம், பக். 282 – 283)

எனப் படைப்பாளர் வலை செய்த முறையைக் குறிப்பிடுகிறார். ஒத்திகைக்காக இருமரங்களில் கட்டி குறும்பைகளையும், கற்களையும் வீச அனைத்தும் வலையின் போத்துமாலுக்குள் சரிந்து பை போல் தொங்கியது. தன் புதிய கண்டுபிடிப்பு வலையினால் சித்திரையிலும் இலாபம் அதிகமாக ஊர்மக்கள் வியந்தனர். மாணிக்கம் வலையைக் காண்பிக்க ஊர்மக்கள் தங்கள் வலைக்கும் போத்துமால் கட்டித்தருமாறு கேட்க அனைவருக்கும் தயார் செய்து தந்தான். சித்தமருத்துவனான மாணிக்கத்தின் புதிய சிந்தனையில் உருவாகிய போத்துமால் வலையால் ஊரே பயனடைந்தது. கல்வியறிவு எத்துறையிலும் புத்தொளியை உருவாக்கும் என்பதை மாணிக்கத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

மாணிக்கத்தின் வலை கப்பலில் சிக்கி வீணானதால் நிலைகுலைந்தான். கடல் திரவியமான அம்பரைத் தேடி அலைந்து கிடைக்காததால் விரக்தியடைந்தான். மனைவி செல்லாயியும் படுக்கையில் விழ, மகன் நாஞ்சியின் ஒரு வருமானம் பற்றாமல் குடும்பம் வறுமையில் சிக்கியது. மாணிக்கத்திற்கு தனக்குப் பின் தம் வம்சத்தினர் கடலுக்குச் செல்வது பிடிக்கவில்லை.நாஞ்சிக்குச் சிறுபட்டறை அமைத்துத் தரவேண்டுமென்றால் மூலதனத்திற்கு என்ன செய்வது? என சிந்தித்தான். கடலுக்குச் சென்ற மீனவன் வடிவேலுப்பிள்ளை இறக்க அரசாங்கம் ரூ. 75,000/- தந்ததை எண்ணிய மாணிக்கம் இறுதியாக செய்த தவறுகளுக்காக மனைவியிடம் மானசீகமாக மன்னிப்புக்கேட்டவனாக கடலிலேயே விழுந்து இறந்தான்.

உயிருக்கு உத்திரவாதமில்லாதத் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களின் வாழ்க்கை ஆழ்கடலின் சுழலில் சிக்கிய கப்பலாக சிதைந்துப் போவதைப் படைப்பாளர் பதிவுசெய்துள்ளார். தன் தீயப்பழக்கங்களாலேயே குடும்பத்தின் நிலை தாழ்ந்ததாகக் கருதிய மாணிக்கம் இனி மேன்மையுற தானே அடித்தளமாக வேண்டும் என்ற எண்ணத்தில் கடலில் மூழ்கி தற்கொலை செய்து கொள்வதாக நாவல் முடிவடைகிறது.

"எழுத்தாளனுக்கு சமூகப் பிரச்சினை பற்றி இருநிலைப்பட்ட தெளிவு இருத்தல்வேண்டும். முதலில் இதுதான் பிரச்சினையென்ற கல்வி நிலைநின்ற, உலகநிலைநின்ற தெளிவு வேண்டும். சமூகப் பிரச்சினைகளை, அவற்றின் பரிணமிப்பு முறைகள் காரணமாகத் தவறாக விளங்காது, அவற்றின் மூலத்தன்மையை அறிந்து பிரச்சினையை விளங்கிக் கொள்வது முக்கியமாகும். இரண்டாவதாக அப்பிரச்சினை மனித வாழ்க்கையில் 'உயிரும் சதையும்உள்ளதாகவும் உணர்ச்சி மூச்சினையுள்ளதாகவும் எவ்வாறு பரிணமிக்கிறது'என்ற தெளிவு வேண்டும். இந்தத் தெளிவினாலேயே அவன் இலக்கியத்தை உணர்ச்சி ஆயுதமாக்கும் திறனைப் பெறுகிறான்"

(கார்த்திகேசு சிவத்தம்பி, இலக்கியமும் கருத்துநிலையும், ப.29.)

என்ற கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் கருத்து ஒரு படைப்பாளர் எனும்முறையில் சு. தமிழ்ச்செல்விக்கும் பொருத்தமானதாக அமைகிறது. படைப்பாளரின் அனுபவம், உணர்வைப் பாதித்த சமூகப் பிரச்சினைகளேபடைப்புகளாக வெளிவருகின்றன. படைப்பாளர் கதைக்களத்தையோ, கதைமாந்தர்களின் குணாதிசயங்களையோ ஆராய்ந்து எழுத வேண்டிய அவசியமில்லாமல் தான் கண்ட, கேட்ட பெண்களின் வாழ்க்கையையே படைப்பாக்கியதால் படைப்புகள் சிறந்து விளங்குகின்றன.

**தொகுப்புரை**

இலக்கிய வகைகளுள் ஒன்றான நாவல் மனிதனின் வாழ்வியல் பொருண்மைகளைத் தக்கவாறு எடுத்துரைத்து சிந்தனையைத் தூண்டி, சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் முனைப்போடு முகிழ்க்கின்றது. நாவல் வாழ்வின் ஒரு பகுதியை மட்டும் குறிப்பிடாமல் அதன் கருவைச் சார்ந்த அனைத்தையும் தொகுத்துரைப்பதால் மற்ற இலக்கிய வடிவங்களிலிருந்து மாறுபட்டு பூரணத்துவம் பெற்று விளங்குகிறது. படைப்பாளர் சு. தமிழ்ச்செல்வி தமது படைப்புகளில் சமூகத்தின் விளிம்பில் உள்ள மீனவர்களின் மீது அக்கறைப்படுவதுடன் சமுதாயத்தில் பெண்களின் அவலநிலையைச் சுட்டி சிக்கல்களை எதிர்த்துப் போராடும் மனவுறுதி படைத்தவர்களாகவும் அமைத்திருப்பது புலனாகின்றது. ஆறுகாட்டுத்துறை நாவலில் நாட்டாரின் நிர்வாக அறத்தினையும் தலைவருக்கு மதிப்பளிக்கும் மக்களின் கட்டுப்பாட்டுணர்வையும் நோக்கும்போது தலைமைப் பதவிக்கான ஆளுமைத்திறன் வெளிப்படுகிறது. இது பிறரை வஞ்சிக்கும் சமூகப் புல்லுருவிகளுக்குப் பாடமாவதுடன், ஒருவருக்கொருவர் உதவியாக உறுதுணையாக வாழும் பண்பையும் வலியுறுத்துகிறது. மீனவத்தொழிலின் நுட்பங்கள், இறால்பிடிப்பதற்கான புதியவலை, உயிருக்கு உத்திரவாதமில்லாத மீனவர்களின் வாழ்க்கையினைப் பதிவுசெய்வதன் மூலமாக இம்மக்களின் வளர்ச்சியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற படைப்பாளரின் எண்ணம் புலனாகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. இரவிச்சந்திரன். தி.கு. - ஒரு ஃப்ராய்டியன் பார்வையில் தமிழ் நாட்டுப்புற வழக்காறுகள், அலைகள் வெளியீட்டகம், சென்னை, பதிப்பு. 2011.
2. கார்த்திகேசு சிவத்தம்பி, இலக்கியமும் கருத்துநிலையும், மக்கள் வெளியீடு சென்னை, பதிப்பு .2002.
3. சோமசுந்தரனார். பொ.வே. (உ.ஆ) – பத்துப்பாட்டு (பகுதி இரண்டு) ,சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதிப்பு 2008 .
4. தமிழ்ச்செல்வி. சு - ஆறுகாட்டுத்துறை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, பதிப்பு.2006.
5. தமிழ்ச்செல்வி. சு - மாணிக்கம், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, பதிப்பு.2007.
6. *பொன்னீலன். தேடல்*. நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, பதிப்பு.1997.


## Sub-Books


[1]. Iravichandran. T.K. - Tamil Folklore from a Freudian Perspective, Alaygal Publishing House, Chennai, Edition. 2011.

[2]. Karthikesu Sivathambi, Literature and Attitude, People's Publishing House, Chennai, Edition.2002.

[3]. Somasundaranar. P.V. (U.A) - Pathuppatta (Part Two), Saiva Siddhanta Publishing House, Chennai, Edition.2008.

[4]. Tamil Selvi. Su - Arukattuthurai, New Century Bookstore, Chennai, Edition.2006.

[5]. Tamil Selvi. Su - Manickam, New Century Bookstore, Chennai, Edition.2007.

[6]. Ponnilan. Search. New Century Bookstore, Chennai, Edition.1997.